முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு

# ஈரோடு வடக்கு மாவட்டம் முழுவதும் 100 இடங்களில் தொடர் தெருமுனைக் கூட்டங்கள்!



மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் அறிவிப்பு!

| வ.எ | ஒன்றியம்/பேரூர்/ மாவட்ட அணிகள் | தேதி | இடம் | பேச்சாளர்கள் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | பவானி வடக்கு ஒன்றியம் | 25.06.2023 ஞாயிறு | 1.முன்ரோடு 2.குரப்பநாயக்கன்பாளையம் 3.தொட்டிபாளையம் | ஆலந்தூர் ஒப்பிலாமணி (94443-50302) |
| 2 | பவானி தெற்கு ஒன்றியம் | 25.06.2023 ஞாயிறு | 1.ஆலத்தூர் 2.கவுந்தப்பாடி 3.ஓடத்துறை | திருப்பூர் மனோகர் பாபு (96598-96949) |
| 3 | அம்மாபேட்டை தெற்கு ஒன்றியம் | 25.06.2023 ஞாயிறு | 1.பூதப்பாடி 2.ஒட்டப்பாளையம் 3.குட்டை முனியப்பன் | சேலம் கோவிந்தன் (93631-94596) |
| 4 | கோபி தெற்கு ஒன்றியம் | 25.06.2023 ஞாயிறு | 1.முத்துகாளிமடை காலனி 2.வெள்ளாளபாளையம் பஞ்சாயத்து ஆபிஸ் எதிரில் 3.நஞ்சைகோபி-கொளவிகரடு | கோவை சம்பத் (99408-19531) |
| 5 | நம்பியூர் ஒன்றியம் | 25.06.2023 ஞாயிறு | 1.கெட்டிசெவியூர் 2.மலையபாளையம் 3.கோசணம் | சிங்கை பிரபாகரன் (96778-87496) |
| 6 | டி.என்.பாளையம் ஒன்றியம் | 25.06.2023 ஞாயிறு | 1.பங்களாப்புதூர் 2.கள்ளிப்பட்டி 3.கணக்கம்பாளையம் | பசும்பொன் ரவிச்சந்திரன் (94422-50161) |
| 7 | அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம் | 26.06.2023 திங்கள் | 1.சனிசந்தை 2.பட்லூர் நால்ரோடு | ஆலந்தூர் ஒப்பிலாமணி (94443-50302) |
| 8 | கோபி வடக்கு ஒன்றியம் | 26.06.2023 திங்கள் | 1.கடுக்காம்பாளையம் 2.மேவாணி 3.சவுண்டப்பூர் | சேலம் கோவிந்தன் (93631-94596) |
| 9 | தாளவாடி கிழக்கு ஒன்றியம் | 26.06.2023 திங்கள் | 1.ஆசனூர் ஊராட்சி அரேபாளையம் 2.திங்களூர் ஊராட்சி சுஜ்ஜில்கரை 3.தலமலை ஊராட்சி | பவானி கண்ணன் (94449-10784) |
| 10 | கொளப்பலூர் பேரூர் | 26.06.2023 திங்கள் | 1.கல்லுமடை 2.கொளப்பலூர் பஸ்நிலையம் | தூத்துக்குடி சரத்பாலா (82202-03675) |
| 11 | எலத்தூர் பேரூர் | 26.06.2023 திங்கள் | 1.எலத்தூர் பஸ்நிலையம் 2.செட்டிபாளையம் | ரஜினி செந்தில் (90035-99994) |
| 12 | கே.என்.பாளையம் பேரூர் | 26.06.2023 திங்கள் | 1.முருகன்கோவில் பஸ்நிலையம் 2.அம்மன்கோவில் பஸ்நிலையம் | வேலூர் கென்னடி (94430-36864) |
| 13 | சலங்கபாளையம் பேரூர் | 27.06.2023 செவ்வாய் | 1.சலங்கபாளையம் 2.எரப்பநாயக்கனூர் | சைதை சாதிக் (95640-16668) |
| 14 | அம்மாபேட்டை பேரூர் | 27.06.2023 செவ்வாய் | 1.அம்மாபேட்டை 2.ஊமாரெட்டியூர் மாரியம்மன் கோவில் அருகில் | கோ.வெ.குமணன் (98422-95915) |
| 15 | நெரிஞ்சிப்பேட்டை பேரூர் | 27.06.2023 செவ்வாய் | 1.நெரிஞ்சிப்பேட்டை அரிசன காலனி 2.ஆரியகவுண்டனூர் அரிசன காலனி | எழும்பூர் கோபி (98406-63799) |
| 16 | அந்தியூர் பேரூர் | 27.06.2023 செவ்வாய் | 1.தவிட்டுபாளையம் மார்க்கெட் 2.காந்தி மைதானம் அருகில் | சென்னை அரங்கநாதன் (99625-36445) |
| 17 | பெரியகொடிவேரி பேரூர் | 27.06.2023 செவ்வாய் | 1.நால்ரோடு பிரிவு 2.கள்ளிப்பட்டி பிரிவு | தமிழ்ப்பிரியன் (86082-68993) |
| 18 | பவானிசாகர் பேரூர் | 27.06.2023 செவ்வாய் | 1.மார்க்கெட் சதுக்கம் | நீலகிரி M.P.ஆலன் (94439-31374) |
| 19 | ஆப்பக்கூடல் பேரூர் | 28.06.2023 புதன் | 1.ஆப்பக்கூடல் நால்ரோடு 2.அம்பேத்கர் நகர் | சைதை சாதிக் (95640-16668) |
| 20 | ஜம்பை பேரூர் | 28.06.2023 புதன் | 1.ஜம்பை 2.வாய்க்கால்பாளையம் | ஈரோடு இளையகோபால் (98655-49161) |
| 21 | ஒலகடம் பேரூர் | 28.06.2023 புதன் | 1.ஒலகடம் 2.குந்துபாயூர் | எழும்பூர் கோபி (98406-63799) |
| 22 | அத்தாணி பேரூர் | 28.06.2023 புதன் | 1.அத்தாணி மெயின் ரோடு 2.நால்ரோடு | சென்னை அரங்கநாதன் (99625-36445) |
| 23 | காசிபாளையம் பேரூர் | 28.06.2023 புதன் | 1.மணியகாரம்பாளையம் பிரிவு 2.காசிபாளையம் | ஆரூர் மணிவண்ணன் (95660-55557) |
| 24 | நம்பியூர் பேரூர் | 28.06.2023 புதன் | 1.கெடாரை செல்லியாண்டி அம்மன் கோவில் அருகில் 2.புதுசூரிபாளையம் அய்யன் கோவில் எதிரில் | பவானி கண்ணன் (94449-10784) |
| 25 | அந்தியூர் ஒன்றியம் | 29.06.2023 வியாழன் | 1.பிரம்மதேசம் 2.கீழ்வாணி 3.ஓசைப்பட்டி | சேலம் சுஜாதா (96260-50717) |
| 26 | சத்தி வடக்கு ஒன்றியம் | 29.06.2023 வியாழன் | 1.சதுமுகை 2.ஒண்டியூர் பிரிவு 3.ஆலத்துக்கோம்பை | கரூர் முரளி (94431-22557) |
| 27 | பவானிசாகர் வடக்கு ஒன்றியம் | 29.06.2023 வியாழன் | 1.உத்தண்டியூர் ஊராட்சி எரங்காட்டூர் பிரிவு 2.தொப்பம்பாளையம் ஊராட்சி தொட்டம்பாளையம் 3.கொத்தமங்கலம் ஊராட்சி வெள்ளியம்பாளையம் பிரிவு | சேப்பாக்கம் பிரபாகரன் (70108-20683) |
| 28 | கூகலூர் பேரூர் | 29.06.2023 வியாழன் | 1.கொளத்துக்கடை 2.காட்டுவளவு | கந்தலிகரிகாலன் (97867-06965) |
| 30 | வாணிப்புத்தூர் பேரூர் | 29.06.2023 வியாழன் | 1.பள்ளத்துமேடு 2.பள்ளத்தூர் | செந்தூர் பாலகிருஷ்ணன் (96004-65455) |
| 31 | அரியப்பம்பாளையம் பேரூர் | 29.06.2023 வியாழன் | 1.பெரியூர் 2.வாய்க்கால்மேடு | ஆடுதுறை உத்திராபதி (94431-95941) |
| 32 | சத்தி தெற்கு ஒன்றியம் | 30.06.2023 வெள்ளி | 1.கோணமூலை காந்திநகர் 2.செண்பகபுதூர் பஸ்நிலையம் 3.அரசூர் பஸ் நிலையம் | கரூர் முரளி (94431-22557) |
| 33 | பவானிசாகர் தெற்கு ஒன்றியம் | 30.06.2023 வெள்ளி | 1.தேசிபாளையம் ஊராட்சி புங்கம்பள்ளி 2.மாதம்பாளையம் ஊராட்சி கலைஞர்நகர் 3.காவிலிபாளையம் | சேப்பாக்கம் பிரபாகரன் (70108-20683) |
| 34 | பி.மேட்டுப்பாளையம் பேரூர் | 30.06.2023 வெள்ளி | 1.மேட்டுப்பாளையம் 2.விஜயன் தியேட்டர் அருகில் | திருப்பூர் கூத்தரசன் (94863-24163) |
| 35 | லக்கம்பட்டி பேரூர் | 30.06.2023 வெள்ளி | 1.காலேஜ் பிரிவு 2.நல்லகவுண்டன்பாளையம் | ஆடுதுறை உத்திராபதி (94431-95941) |
| 36 | மாவட்ட தகவல் தொழிற்நுட்ப அணி | 01.07.2023 சனி | 1.வேமாண்டம்பாளையம் 2.பொலவபாளையம் 3.அஞ்சானூர் | நாகம்மை கருப்பையா (97909-94670) |
| 37 | மாவட்ட விவசாய தொழிலாளர் அணி | 01.07.2023 சனி | 1.கடம்பூர் 2.குன்றி 3.இருட்டிபாளையம் | முரசொலி மூர்த்தி (89391-39429) |
| 38 | மாவட்ட அமைப்புச்சார ஓட்டுநர் அணி | 01.07.2023 சனி | 1.சங்காராபாளையம் 3ரோடு 2.மைக்கேல்பாளையம் 3.சின்னதம்பிபாளையம் | குடியாத்தம் குமரன் (93441-27224) பவானி கண்ணன் |
| 39 | மாவட்ட பொறியாளர் அணி | 02.07.2023 ஞாயிறு | 1.வேலம்பாளையம் 2.வெள்ளாங்கோவில் 3.குமரன்நகர் | நாகம்மை கருப்பையா (97909-94670) |
| 40 | மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி | 02.07.2023 ஞாயிறு | 1.பர்கூர் 2.கிழக்குமலை 3.மேற்குமலை | பவித்ரம் கண்ணன் (94431-64654) |
| 41 | மாவட்ட நெசவாளர் அணி | 02.07.2023 ஞாயிறு | 1.குதிரைக்கல்மேடு 2.குறிச்சி 3.சித்தார் | பொன்னேரி சிவா (98415-34800) |
| 42 | மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி | 02.07.2023 ஞாயிறு | 1.கொங்கர்பாளையம் 2.எழூர் | தீக்கனல் கருணாநிதி (73396-24316) கோ.வெ.குமணன் (98422-95915) |

**என்.நல்லசிவம்**
செயலாளர்
ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.க.

---

சவூதி தமிழ்க் கலாச்சார மைய விழாவில்

## கழகப் பொருளாளர் டி.ஆர். பாலுவின் ‘பாதை மாறாப் பயணம்’ நூல் வெளியீடு!

### பர்வீன் சுல்தானா வெயிட - கவிஞர் கையூம் பெற்றுக் கொண்டார்!

தமாம், ஜூன் 19-

சவூதி தமிழ்க் கலாச்சார மைய விழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர் பாலு எம்.பி. அவர்கள் எழுதிய அவரது வாழ்க்கை வரலாற்று நூலான, “பாதை மாறாப் பயணம்” நூலின் வெளியீடு நடைபெற்றது. அதன் தலைவர் சவூதி ரகமதுல்லா சீரிய முயற்சியில் முனைவர் பர்வீன் சுல்தானா நூலினை வெளியிட கவிஞர் கையூம், மன்னை முபாரக் ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

பாரதி தமிழ் சங்க துணை தலைவர் வல்லம் பசீர் நிகழ்வை ஒருங்கிணைத்தார். நூஹு, பத்ருதீன் அப்துல் மஜீத், மதுரா முத்து, யாஜ் உமாசங்கர், அஞ்சப்பர் ஜியா, ஆசிரியர் பரிதா.சாகுல் அமீத் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், கோவூர் ஊராட்சியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகத்தை தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ. மனோகரன், ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி, துணைத் தலைவர் உமா மகேஸ்வரி மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.

---

பா.ஜ.க. அரசு அமல்படுத்தத் துடிக்கும் பொது சிவில் சட்டம்

# இந்தியாவின் பன்முகத் தன்மையைச் சிதைத்து விடும்!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் எச்சரிக்கை

சென்னை, ஜூன் 19 -

ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மதம் என்று முரண்பாடான கோட்பாடுகளை முன்வைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு அமல்படுத்த துடிக்கும் பொது சிவில் சட்டம் இந்தியாவின் பன்முகத் தன்மையை சிதைத்துவிடும் என தினகரன் நாளேடு 18.6.2023 அன்று தலையங்கத்தில் எச்சரித்துள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

அயோத்தியில் ராமர்கோயில், காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து ரத்து, உயர்சாதியினருக்கு பத்து சதவீத இடஒதுக்கீடு என்று சர்ச்சைகளில் மட்டுமே சரித்திரம் படைக்கும் பாஜ அரசு, கையில் எடுத்துள்ள புதிய அஸ்திரம் பொதுசிவில் சட்டம். இந்த பொதுசிவில் சட்டம் என்பது, இந்திய தேசம் சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து முக்கிய பிரச்னைகளின் போது மக்களை திசை திருப்பும் அம்சங்களில் ஒன்றாகவே இருந்து வருகிறது. 1947 மார்ச் 28 ஆம் தேதி, அடிப்படை உரிமைகள் குறித்து ஆராய்வதற்கான துணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் உறுப்பினர்களில் ஒருவரான எம்.ஆர்.மசானி, திடீரென பொதுசிவில் சட்டம் பற்றிய முன்மொழிவை கொண்டு வந்தார். மற்ற உறுப்பினர்கள் இதை கடுமையாக எதிர்த்தனர். இதனால் மசானியின் கோரிக்கை கைவிடப்பட்டது. 1947 மார்ச் 30 ஆம் தேதி அரசமைப்புச் சட்டத்தில் மீண்டும் இது குறித்து விவாதிக்கப்பட்டது.

அப்போது இந்தச் சட்டத்தில் 36 முதல் 51 வரையிலான பிரிவுகளை அரசமைப்பின் வழிகாட்டும் நெறிமுறைகளில் ஒன்றாக வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. பொதுசிவில் சட்டத்தில் 14 வயது வரை அனைவருக்கும் இலவச கல்வி, ஆண்பெண் இரு பாலருக்கும் சமமான வேலைவாய்ப்பு, ஊதி யம், நாடு முழுவதும் மதுவிலக்கை அமல்படுத்துதல் என்று பொதுவான குறிப்பிட த்தக்க அம்சங்கள் ஏராளம் உள்ளது. இந்த சட்டம் நடைமுறைக்கு வந்தால், பாலின சமத்துவம் அதிகரிக்கும். சாதி, மதத்தின் பெயரால் தற்போது நடக்கும் பாகுபாடுகள் குறையும்.



தினகரன்

சந்தேகம் இயல்பானதே...

தற்போது நடைமுறையில் உள்ள ஆயிரக்கணக்கான சட்டங்கள் வெகுவாக குறைக்கப்படும். இதனால் நீதித்துறை விசாரணைகள் எளிமையாகும் என்று சட்டத்தில் உள்ள சாதகங்களை முன்வைத்து ஆதரவு குரல் எழுப்புவோரும் கணிசமாக உள்ளனர். இது ஒருபுறமிருக்க, பா.ஜ.க. நடத்தும் ஒன்றிய அரசு முன்னெடுக்கும் ஒவ்வொரு முனைப்புகளும், மதம்சார்ந்தே இருக்கும் என்பதை தனியாக கோடிட்டு காட்ட வேண்டிய அவசியமில்லை. கடந்த 9 ஆண்டுகளாக அவர்கள் அறிவித்த பல்வேறு திட்டங்கள் இதை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் தான், அடுத்த ஆண்டு நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டு, பொதுசிவில் சட்டத்தை கையில் எடுத்துள்ளது பா.ஜ.க. என்கின்றனர் அனுபவம் வாய்ந்த அரசியல் நோக்கர்கள்.

ஜாதி, மதம், இனம், மொழி கடந்து வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு இந்தியா. இங்கே இந்துக்களுக்கான திருமணச்சட்டம், முஸ்லிம் தனிநபர் சட்டம், சீக்கியர்களுக்கான சட்டம், பழங்குடி மக்களுக்கான சட்டம் என்று பல்வேறு சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இந்தச் சட்டங்கள் அனைத்தும் அவர்களின் இனம், மதத்தின் மீதான நம்பிக்கை சார்ந்தே உள்ளது. ஆனால், அதற்கு எந்த இடையூறும் இல்லாமல் சகோதரத்துவம் இங்கே ஓங்கி நிற்கிறது. இப்படிப்பட்ட நிலையில், ஒரே நாடு ஒரே கார்டு என்று கூறிய பா.ஜ.க., தற்போது ஒரே நாடுஒரே தேர்தல், ஒரே நாடுஒரே மதம் என்று முரண்பாடான கோட்பாடுகளையும் முன்வைத்து வருகிறது. இந்த வகையில் அனைவருக்கும் பொதுவானது என்று கூறி, ஒன்றிய பா.ஜ.க. அரசு அமல்படுத்த துடிக்கும் பொதுசிவில் சட்டமும், இந்தியாவின் பன்முகத்தன்மையை சிதைத்து விடும் என்ற சந்தேகம், மக்கள் மனதில் எழுவது இயல்பானதே....

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

---

திருவாரூர் ‘கலைஞர் கோட்டம்’ திறப்பு விழாவில்

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!



புதுக்கோட்டை, ஜூன் 19-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நாளை (20.6.2023) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உலகத் தமிழினத்தின் உன்னதத் தலைவராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி திருவாரூர் மாவட்டம், காட்டூரில் திருமதி.தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கோட்டம் மற்றும் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு விழா கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகி கள், ஒன்றிய பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள். இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள். மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

---

ஆர்.கே.நகர் 40வது வட்டத்தில்

# பேராசிரியர் பொதுப்பணி மன்ற நிர்வாகிகள் தேர்வு !

### வட்டச்செயலாளர் நா.கோதண்டன் அறிக்கை !

சென்னை,ஜூன் 19 -

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40வது வட்டத்தில் அமைந்துள்ள பேராசிரியர் பொதுப்பணி மன்றம் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கபட்டனர்.

இதில் தலைவர் இ. வேலு, செயலாளர் எஸ்.நடராஜ், துணைச் செயலாளர் எஸ்.பழனி, பொருளாளர் மா.பாஸ்கரன், மன்ற ஆலோசகர் எஸ்.கண்ணதாசன், செயற்குழு உறுப்பனர்கள் டிஎல்பி.என்.ரவி, எஸ்.துரை, ஜி.மைக்கேல், கே.ஜி.சங்கர், கே.தமிழ்செல்வன், போட்டோ மூர்த்தி, கே.குமார், ஸ்ரீதரன், நாகப்பன், வேலுச்சாமி, ஆர்.லெனின்குமார், கே.பார்த்திபன், எஸ்.வினோத்குமார்,

40வது வட்டச்செயலாளர் நா.கோதண்டன், ஆணையராக இருந்து பேராசிரியர் பொதுப்பணி மன்றத்திற்கு நடத்தப்பட்ட தேர்தலில் மேற்காணும் நபர்களை நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கபட்டனர்.

சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, பகுதிச்செயலாளர் இரா.லட்சுமணன், ஆகியோருக்கு நன்றி தெரிவித்து இம்மன்றம் சிறப்பாக செயல்படும் என்று தெரிவித்தார்.





தாம்பரம் மாநகரம், சிட்லபாக்கத்தில் உள்ள சமர்த்தனம் மாற்றுத்திறனாளிகளின் மையம் சார்பில், தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, முரசொலியில் 50 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்ற ஞானவேல் அவர்களின் பேரன் ரங்கராஜன் அவர்களுக்கு தானியங்கி மின்கல (BATTERY) வண்டியினை வழங்கினார். இந்நிகழ்வில் சிட்லபாக்கம் பேரூர் கழக மு.செயலாளர் இ.மனோகரன், சிட்லபாக்கம் பேரூராட்சி மன்ற மு.உறுப்பினர் பா.பிரதாப், புனித தோமையார் மலை மு.ஒன்றிய பிரதிநிதி இ.வி.சுரேஷ், 11வது வார்டு மு.செயலாளர் மு.பாரதிதாசன் ஆகியோர் பங்கேற்றனர்

---

பரணிபுத்தூர் எஸ்.ஜெய்சங்கர் - முரசொலி முகவர் எஸ்.ஜெய்கணேஷ் தந்தை

# மு.சகாதேவன் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி!

### கழகத்தினர் அஞ்சலி!



காஞ்சிபுரம், ஜூன் 19-

கோவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிச் செயலாளர் எஸ்.ஜெய்சங்கர், முரசொலி முகவர் எஸ்.ஜெய்கணேஷ் ஆகியோரின் தந்தையும், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி எஸ்.ராஜாமணி அம்மாளின் கணவரும், பரணிபுத்தூர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான மு.சகாதேவன் அவர்களின் 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி நாளை (20.6. 2023 - செவ்வாய்க் கிழமை) நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் குன்றத்தூர் தெற்கு - வடக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட அணிகளின் நிர்வாகி கள் கலந்துகொண்டு மறைந்த மு.சகாதேவன் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகின்றனர்.